பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 11 2025 TUESDAY 12 40 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அயோத்தி ராமர் கோவிலில் ஏற்றப்பட்டுள்ள கொடி, நாட்டின் கலாச்சார மறுமலர்ச்சியின் அடையாளமாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டின் வர்த்தகத்தில் 95 சதவீதம், கடல்வழியாக மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. நடப்பு நிதியாண்டில், நாட்டு மக்களின் சேமிப்பு 9 லட்சத்து, 90 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்

4. H-1B விசா குறித்த அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பின் கருத்து, அமெரிக்காவின் நலனை பாதுகாக்கும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

5. உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<

அயோத்தி ராமர் கோவிலில் ஏற்றப்பட்டுள்ள கொடி, நாட்டின் கலாச்சார மறுமலர்ச்சியின் அடையாளமாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இக்கோவில் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றதை குறிக்கும் வகையில், இன்று கொடியேற்றி வைத்துப் பேசிய அவர், இந்த தருணம் தனித்துவமானது என்று தெரிவித்தார்.

ராமர் கோவில் கட்டிமுடிக்கப்பட்டதன் மூலம், பக்தர்களின் 500 ஆண்டுகால விருப்பம் நிறைவேறியுள்ளதாக பிரதமர் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட சமுதாயத்தின் அனைத்து தரப்பினரும், நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அனைவரின் ஒருங்கிணைந்த முயற்சியால் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவது சாத்தியமாகும் என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பாகவத், இன்று கொடியேற்றப்பட்டிருப்பதன் மூலம், ராமர் கோவில் அமைவதற்காக பாடுபட்டவர்களின் கனவு நிறைவேறியிருப்பதாக தெரிவித்தார்.

22 அடி நீளம், 11 அடி அகலத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கொடி, 161 அடி உயரக் கோபுரத்தில் ஏற்றப்பட்டது.

>>>>>><<<<<

நாட்டின் வர்த்தகத்தில் 95 சதவீதம், கடல்வழியாக மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சுமார் 7 ஆயிரத்து 500 கிலோமீட்டர் தொலைவுக்கான கடற்பகுதியை கொண்டிருப்பதோடு, இந்தியப் பெருங்கடல் பகுதியிலும் முக்கியமான நாடாக இந்தியா திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

கடல்வழி சரக்குப் போக்குவரத்து, குறைந்த செலவில் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக பல்வேறு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிவதாக அவர் கூறியுள்ளார்.

கப்பல் கட்டுமான தொழிலில் இந்திய சிறந்து விளங்குவது பெருமிதம் அளிப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

நடப்பு நிதியாண்டில், நாட்டு மக்களின் சேமிப்பு 9 லட்சத்து, 90 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த சேமிப்புத் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில், மக்களின் கடன் சுமை, 15 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாயாக குறைந்துள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

ரயில்களின் இயக்கத்தை துல்லியமாக கண்காணிக்கும் வசதி, விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

செகந்திராபாதில் உள்ள ரயில்வே சிக்னல் பொறியியல் மற்றும் தொலைத்தொடர்பு பயிற்சி நிறுவனத்தின் ஆண்டு விழாவில் பேசிய அவர், வேகமாக வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இதனை சாத்தியமாக்கும் என்று குறிப்பிட்டார்.

ரயில்களை பாதுகாப்பாக இயக்குவதற்கு துல்லியமான தொலைத்தொடர்பு வசதி அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதற்கு தேவையான தொழில்நுட்பத்தை வழங்குவதில் இஸ்ரோ செயற்கைக் கோள்கள் முக்கியப் பங்கு வகித்து வருவதாகவும் திரு. நாராயணன் தெரிவித்தார்.

>>>>>><<<<<

கப்பல் கட்டும் தொழிலில் இந்தியா - கொரியா இடையேயான ஒத்துழைப்பு பெரிதும் பலனளிப்பதாக அமையும் என்று கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

கொரிய செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், இத்தகைய ஒத்துழைப்பு நாட்டின் கப்பல் கட்டும் திறனை மேம்படுத்தும் என்றும், கடல்சார் பாதுகாப்பையும் வலுப்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

2047ஆம் ஆண்டுக்குள் கப்பல் கட்டும் தொழிலில் உலகின் ஐந்து முன்னணி நாடுகளில் ஒன்றாக உருவெடுப்பதே இந்தியாவின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்துறையில் 24 பில்லியன் டாலர் முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ள திரு. சர்பானந்த சோனோவால், கப்பல் போக்குவரத்தில் சுயசார்பை எட்டும் வகையில், சரக்கு கப்பல்களின் எண்ணிக்கையை இரண்டாயிரத்து 500-ஆக அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

குரு தேஹ்பகதூரின் 350-வது நினைவு தினத்தை ஒட்டி, அவரது ஈடுஇணையற்ற துணிச்சல் மற்றும் தியாகத்திற்கு தலைவணங்குவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மத நம்பிக்கை மற்றும் மனிதகுலத்தை பாதுகாப்பதற்கான அவரது தியாகம், என்றும் நினைவுகூரத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ஹரியானாவின் குருஷேத்ராவில் இன்று மாலை நடைபெறும் தியாக தின நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார்.

>>>>>><<<<<

H-1B விசா குறித்த அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பின் கருத்து, அமெரிக்காவின் நலனை பாதுகாக்கும் என்று வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் திருமதி. Karoline Leavitt, பல்வேறு துறைகளின் தேவைகளுக்காக வெளிநாட்டவர்களை பணியமர்த்தினாலும், காலப்போக்கில், அமெரிக்க தொழிலாளர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே அதிபரின் விருப்பமாக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் திரு. டோனல்ட் ட்ரம்பின் கருத்து, தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக திருமதி. Karoline Leavitt கூறியுள்ளார்.

**>>>>>><<<<<**

தொழிலாளர் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம், 77 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைமுறைக்கு வந்துள்ள புதிய தொழிலாளர் சட்டங்கள், வேலைவாய்ப்பின்மையை ஒன்று புள்ளி மூன்று சதவீதம் வரை குறைக்கக்கூடும் என்று அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

இதன் காரணமாக, மக்களின் வாங்கும் திறனும் அதிகரிக்கும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<**

மகளிர் மற்றும் சிறுமிகள் பாதுகாப்பாக வாழக்கூடிய வகையில், உலகை உருவாக்குவதற்கு ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மகளிருக்கு எதிரான வன்முறை உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகவும், தற்போதைய டிஜிட்டல் யுகத்தில் இது அதிகரித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

சமூக ஊடகங்கள், பெண்களுக்கு எதிரானதாக மாறுவதை அனுமதிக்க முடியாது என்றும் திரு. ஆண்டனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<**

காசநோய்க்கான தடுப்பூசி கண்டுபிடிப்பு ஆராய்ச்சிகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில், புவனேஷ்வர் ஐ.ஐ.டி., புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

உயிர் அறிவியல் நிறுவனம், தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம் மற்றும் Tech Invention Life Care நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் வாயிலாக புதிய தடுப்பூசி குறித்த தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் வணிக ரீதியிலான உற்பத்திக்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

**>>>>>><<<<<**

மலாக்கா கடற்பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, அடுத்த 48 மணிநேரத்தில் புயலாக வலுப்பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.சென்னையில் எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

ருமேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>><<<<<

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 549 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியின், நான்காம் நாளான இன்று தென்னாப்பிரிக்கா இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 260 ரன் எடுத்திருந்த நிலையில் டிக்ளர் செய்தது.

முதல் இன்னிங்ஸில் தென்னாப்பிரிக்கா 489 ரன்னும், இந்தியா 201 ரன்னும் எடுத்துள்ளன.

>>>>>><<<<<

லக்னோவில் நடைபெற்று வரும் சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லால் ராம் Lal Ram Sanga – Tarini Suri இணை பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>END<<<<<